## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

144, அண்ணா சாலை, சென்னை–600 002.


---

**தலைமையகம்: சென்னை.** **தேதி : 01.07.2017**

# போராட்டப்பாதையில் பொறியாளர் சங்கம்

அன்பு பொறியாளர்களே,

**வணக்கம் பல. பொறுமை கடலினும் பெரிது என்பார்கள்.**

மின்சார வாரியப் பொறியாளர் சங்கத்துடன் வாரியம் பல கட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதாக உறுதியளித்த கோரிக்கைகளை செயல்படுத்திட வலியுறுத்தி கடலினும் பெரிய பொறுமையுடன் பொறியாளர் சங்கம் காத்திருக்கின்றது.

வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகள் இவைதாம்.....

## அனைத்து பிரிவுகளுக்கும் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள்

- தொழில்நுட்பம் வாய்ந்த பணிகளை சிறப்பாகவும் தொய்வில்லாமலும் செய்வதற்கும்,
- LT CT இணைப்புகளில் நிதி இழப்பில்லாமல் கணக்கீடு செய்வதிலும்,
- விநியோகப்பிரிவுகளோடு இணைக்கப்பட்டுள்ள 400க்கும் மேற்பட்ட 33 கே.வி. Outdoor துணை மின் நிலையங்களில் பராமரிப்புகளில் உதவி புரிவதற்கும்,
- IMS / R-APDRP / On line Service / One day service போன்ற பணிப்பதிவேடுகள் கணிணியில் பராமரிப்பதிலும்,
- பண வசூல் மையங்களில் ஏற்படும் தற்காலிக Link Failure பிரச்சனைகளிலும், கணிணிகளில் ஏற்படும் தற்காலிக இடர்பாடுகளை களைந்து, பணவசூலில் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்ப்பதிலும்,
- அவ்வப்பொழுது மேல் அதிகாரிகளிடமிருந்து தொழில்நுட்பரீதியாக கேட்கப்படும் அந்தந்தப்பிரிவுகள் சம்மந்தப்பட்ட விவரங்களை e-mail மூலம் தெரிவிப்பதில் பிரிவுப்பொறியாளர்களுக்கு உதவி புரிந்திடவும்,

- **அதன்மூலம் விநியோகப்பிரிவுகளில் அளிக்கப்படும் பொதுமக்கள் சேவை திறம்பட தொடர்வதில் பிரிவுப் பொறியாளர்களுக்கு உதவி செய்திடவும்,**

பிரிவுகளில் ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பொறுப்பை உருவாக்கிட பொறியாளர் சங்கம் பல முறை வாரியத்திடம் கோரிக்கை அளித்த போதிலும், 2005–ல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் Project BEST திட்டம் பயன்பாட்டுக்கு வந்த பிறகு இக்கோரிக்கை நிறைவேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இக்கோரிக்கையை வலியுறுத்தி 2008–ல் அனைத்து மண்டலங்களிலும் கோரிக்கை பேரணி நடைபெற்று அரசிடம் முறையீடு செய்யப்பட்டதின் அடிப்படையில், 2009 ஒப்பந்தத்தில் City பிரிவுகளுக்கு மட்டும் சோதனைரீதியாக அமல்படுத்தப்பட்டது. பின்னர் 2014 ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் நாம் அனைத்து விநியோகப்பிரிவுகளுக்கும் அமல் படுத்திட வலியுறுத்தியும், City பிரிவுகளுக்கு மட்டுமே தொடர்ந்து அனுமதிக்கப்பட்டது.

17.03.2015 சென்னை அண்ணாசாலை தலைமையகம் முன்பு நடைபெற்ற மாநிலம் தழுவிய “**மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**” போராட்டத்தில் முக்கியக்கோரிக்கையாகவும், “**விநியோகப்பிரிவுகளுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை**” சங்கம் வலியுறுத்தியது. வாரியம் இக்கோரிக்கையை நிறைவேற்ற தவறிய சூழ்நிலையில் பொறியாளர் சங்கம் 25.02.2016 முதல் “தொடர் உண்ணாவிரதப் போராட்டம்” அறிவித்த சூழ்நிலையில், 22.02.2016 அன்று வாரியத்தலைவர் அவர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் 23.02.2016 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு மற்றும் பணியமைப்பு நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில்,

**“Already Technical Assistants are posted in city section. Recommendations will be placed to the work load committee to finalise during settlement on work load”.**

என தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களால் வாரியத்தலைவர் ஒப்புதல் அளித்த பேச்சுவார்த்தை குறிப்பு நமக்கு வழங்கப்பட்டது.

**ஆனால் 27.05.2017 அன்று நமக்கு வழங்கப்பட்ட வேலைப்பளு முன்வடிவில் ஏற்கனவே வழங்கப்பட்ட City பிரிவுகளுக்கும் TA பதவிகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது.**

**பட்டயப் பொறியாளர்களுக்கு வாரியம் வழங்கும் நியாயம் இதுதானா ?**

**<u>தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறைக்கு இணையான சம்பளம்</u>**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறையில் பொதுப்பணித்துறை தொழில்நுட்ப உதவியாளர்களின் சம்பளத்துக்கு இணையாக வழங்கிட சங்கம் விடுத்த கோரிக்கை 20 ஆண்டுகளாக நிறைவேற்ற வாரியம் மறுப்பதேன்**?**

வாரியத்தில் பணியாற்றும் அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் அரசுத்துறைகளில் பணியாற்றுபவர்களின் சம்பளத்தைவிட அதிகம் பெறும்போது, பட்டயப் பொறியாளர்களுக்கு, அரசுத்துறை தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இணையான **Rs.9300 – 34800 / Grade Pay Rs.4200/-** சம்பளத்தைக்கூட நிறைவேற்ற வாரியம் மறுப்பது ஏன்**?**

பாராபட்சமான இந்நிலையினை களைந்திட தொடர்ந்து ஜனநாயகரீதியில் போராடும் பொறியாளர் சங்கம் 17.03.2015 – மாநிலம் தழுவிய "**மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**" மூலமும், 25.02.2016 முதல் நடத்த இருந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் முக்கிய கோரிக்கையாக வாரியத்திடம் வலியுறுத்தியதின் அடிப்படையில், 23.02.2016 அன்று வாரியத்தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட குறிப்புகளில்

**"Recommendations will be sent to the wage revision committee for taking action during settlement on revision of wages".**

என தெரிவித்திருந்தும், இன்றுவரை தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்கள் Work Load and Wage Revision Committee-க்கு பரிந்துரை செய்யாததில் உள்நோக்கம் உள்ளதா**?**

**<u>தொழில்நுட்ப உதவியாளர் / சிவில் பதவிகள் உருவாக்குதல்</u>**

வாரியத்தில் பட்டயம் மற்றும் பட்டப் பொறியாளர்களுக்கு பொறுப்புகள் அனுமதிப்பதில் பின்பற்றப்படும் விகிதாச்சாரம் மின்னியல் / இயந்திரவியல் மற்றும் சிவில் பதவிகள் அனைத்திற்கும் பொதுவான நிலையில், இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை / சிவில் பதவிகளுக்கு உரிய Feeder Category-யான (Technical Assistant / Civil) தொழில்நுட்ப உதவியாளர் / சிவில் பதவிகளை உருவாக்க தாமதிப்பது ஏன்**?**

பகுதிநேர பட்டயம் பயின்ற நூற்றுக்கணக்கான வாரியப்பணியாளர்கள், அவர்கள் பெற்ற கல்வித்தகுதிக்கேற்றவகையில் பணிபுரிய Technical Assistant / Civil பதவிகளை உருவாக்காமல் தொழில்நுட்ப உதவியாளர் / உள்முகத்தேர்வு / சிவில் மூலம் கல்வித்தகுதிக்கேற்ப பதவிகளை அவர்களுக்கு அளிக்காதது ஏன்**?**

இக்கோரிக்கைக்காக தொடர்ந்து போராடிவரும், 17.03.2015 சென்னையில் நடைபெற்ற "**மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**" போராட்டத்திலும் முக்கியக்கோரிக்கையாக

வாரியத்திடம் அளித்தும், தொடர் நடவடிக்கை இல்லாத சூழ்நிலையில் 25.02.2016 முதல் நடைபெறுவதாக இருந்த ‘‘தொடர் உண்ணாவிரதப் போராட்டம்’’ வாரியத்தலைவர் அவர்களின் அறிவுரையின்பேரில் தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்கள் 23.02.2016 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாரியத்தலைவர் ஒப்புதல் பெற்று அளித்த பேச்சுவார்த்தை குறிப்புகளில்,

**“Particulars called to ascertain number of civil sub division and Pole casting yards in distribution circles and other areas.On receipt of particulars recommendation will be made to implement”.**

**–**இன்றைய தேதிவரை சிவில் உடகோட்ட மற்றும் Pole Casting Yard-களின் எண்ணிக்கைகளை அடையாளம் காண முடியாததின் காரணம் என்ன**?**

பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டு, செயல்படுத்த தாமதமாகிவரும் இக்கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றிட வலியுறுத்தியும்,

## பிரிவுப் பொறியாளர் பிரச்சனைகள்

பிரிவுப் பொறியாளர்கள் தினம் தினம் சந்திக்கும் பிரச்சனைகளான IMS / R-APDRP / K2 Agreement / Works Contract போன்றவைகளுக்கு தெளிவான உத்தரவுகளும், பணிவரன்முறைகளும் இல்லாத சூழ்நிலையும், அத்தியாவசிய தளவாடப் பொருட்கள் தடையின்றி வழங்கிட முடியாத சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு பொதுமக்களுக்கு தரமான, தடையில்லா மின்சாரம் அளித்திட உரிய நடவடிக்கைகளை எடுத்திட அரசையும், வாரியத்தையும் வலியுறுத்தி,

**18.07.2017 –** செவ்வாய்கிழமை மாலை 05.05 மணிஅளவில் அண்ணாசாலை தலைமையகம் மற்றும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்களிலும்

## ‘‘கவன ஈர்ப்பு நுழைவாயிற் கூட்டம்’’

நடைபெறும். அனைத்து பொறியாளர்களும் நுழைவாயிற் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு, கோரிக்கை வென்றிடுத்திட வேண்டுகிறோம்.

**அலைகடலென அணி திரள்வோம் ! போராடுவோம் !! வெற்றி பெறுவோம் !!!**

இவண்,

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்.**